# சூரியா பொறியியல் கல்லூரியில் மெகா வேலை வாய்ப்பு முகாம்

**விக்கிரவாண்டி,செப்.18–** விக்கிரவாண்டி சூரியா இன்ஜினியரிங் கல்லூரியில், மெகா வேலை வாய்ப்பு முகாம் நடந்தது.

விக்கிரவாண்டி சூரியா கல்வி குழுமம் மற்றும் ஜாப் பாக்டரி இன் சார்பில் வேலை வாய்ப்பு முகாம் நடந்தது.

கல்லூரி சேர்மன் டாக்டர் கவுதம சிகாமணி தலைமை தாங்கினார்.

செயலாளர் டாக்டர் அசோக் சிகாமணி முன்னிலை வகித்தார். வேலை வாய்ப்பு அலுவலர் சந்தான கிருஷ்ணன் வரவேற்றார் .

சூரியா கல்வி குழும இயக்குனர் விசாலாட்சி பொன்முடி, முகாமினை துவக்கி வைத்து பேசினார்.

முகாமில், சென்னை ஜாப் பாக்டரி. இன் தலைமையில், முன்னோடி பன்னாட்டு நிறுவனங்கள், வங்கிகள் உள்ளிட்ட 27 கம்பெனிகள் முகாமில் பங்கேற்றன.

கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, புதுச்சேரி ஆகிய பகுதியிலிருந்து ஆயிரத்து 76 பேர் பங்கேற்றனர்.

இதில் 871 பேர் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான பணி நியமன ஆணையை, இயக்குனர் விசாலாட்சி பொன்முடி வழங்கினார்.

சூரியா இன்ஜினியரிங் கல்லூரி டீன் ஜெய்சங்கர், பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் வெங்கடேஷ், உதவி பேராசிரியர் விவேகானந்தன், ஜாப் பேக்டரி முதன்மை செயல்அலுவலர் முகமது இம்ரான், ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் மற்றும் கம்பெனி நிர்வாகிகள், கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

ஜாப் பாக்டரி பிரதிநிதி மாலினி நன்றி கூறினார்.




■ விக்கிரவாண்டி சூரியா இன்ஜினியரிங் கல்லூரியில் நடந்த வேலை வாய்ப்பு முகாமில், ஜாப் பாக்டரி.இன் முதன்மை செயல்அலுவலர் முகமது இம்ரானுக்கு, நினைவு பரிசை, கல்லூரி இயக்குனர் விசாலாட்சி பொன்முடி வழங்கினார்.

**NEWS: DINAMALAR 18/09/2016**